மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம் களம்பூரில் உள்ள அரசு உயர் நிலைப் பள்ளியில் 1978–79-இல் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் துவக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. கே.ஜே. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, களம் பூரில் உள்ள பள்ளிக்கும் அதே தொகுதியைச் சேர்ந்த இன்னொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் போதுமான சயன்ஸ் லேபரட்டரிக்கான கட்டிட வசதிகள் இல்லை. கட்டிடம் கட்ட இந்த ஆண்டில் அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, முதல் கட்டமாக ஆய்வுக் கூடங்களை கட்டுகின்ற ஒரு செயலிலே அரசு இறங்கியிருக்கிறது. அந்த வகையிலே அரசினர் உயர் நிலைப்பள்ளிகளுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கும்.

* வினா எண் 145—திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள புதுப் பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை ஹையர் செகண்டரி பள்ளியாக மாற்றும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், புதுப் பாளையம் ஒன்றியத்தில் உள்ள புதுப்பாளையம் அரசு உயர் நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, புதுப் பாளையம், கலசப்பாக்கம் போன்ற இடங்களில் உள்ள மேல் நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இடையில் நிறுத்தி வைக்கப்பட்டது, அதை மீண்டும் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அரசு நடவடிக்கை எடுக்கும்.